கக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி // திங்கட்கிழமை (26-07-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 240

## மணலாற்றில் புலிகள் பெரும் தாக்குதல்

# மண்கிண்டி ராணுவ முகாம் தகர்ப்பு

# 60க்கும் அதிகமான படையினர் பலி!

## மூன்று சிப்பாய்கள் சிறை பிடிப்பு

## 17 சடலங்கள் கைப்பற்றப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூலை 26

மணலாற்றுப் பகுதியில் நேற்று அதிகாலை புலிகள் நடத்திய பெரும் அதிரடித் தாக்குதலில் மண்கிண்டிமலை இராணுவ முகாமும் அதைச் சூழவிருந்த மினிமுகாம்கள், காவலரண்கள் ஆகியவையும் தகர்க்கப்பட்டன. இத்தாக்குதலில் அறுபதுக்கும் அதிகமான படையினர் பலியாகினர்; மூன்று சிப்பாய்களை விடுதலைப் புலிகள் சிறைப்பிடித்தனர்; இராணுவத்தினரின் 17 சடலங்களையும் புலிகள் கைப்பற்றினர்.

மணலாற்றுப் பகுதியில் சிங்களக் குடியேற்றத்துக்குப் பாதுகாப்பாக, "ஜானகபுர" என்ற சிங்களக் கிராமத்தில் அமைக்கப்பட்டிருந்த பெரிய இராணுவ முகாமான-மண்கிண்டி மலை முகாம் மீதும் அதைச் சூழவிருந்த இராணுவ மினி முகாம்கள், காவலரண்கள் ஆகியவற்றின் மீதுமே நேற்று அதிகாலை 12 06 மணியளவில் இந்தப் பெரும் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது.

சுமார் 30 நிமிட நேரத் தாக்குதலில் இராணுவ முகாமும், மினி முகாம்களும், காவலரண்களும் புலிகள் வசம் வீழ்ந்தன. அவற்றை அவர்கள் பின்னர் தகர்த்து அழித்தனர்.

### தப்பிய படையினரைத் தேடி மூன்று மணி நேரம் வேட்டை

புலிகளின் திடீர் தாக்குதலை அடுத்து முகாம்களில் இருந்த படையினர் எதிர்த் தாக்குதல் நடத்த முடியாது தப்பி ஓடினர்.

தப்பியோடிய இராணுவத்தினரைத் தேடித் தாக்கி அழிக்கும் நடவடிக்கையில் விடுதலைப் புலிகள் போராளிகள் சுமார் மூன்று மணி நேரம் ஈடுபட்டனர்.

அவ்வேளை —

தமிழ்க் கிராமங்களை அழிப்பதற்குப் படையினர் பயன்படுத்திய புல்டோசர் ஒன்றையும், இரண்டு டிராக்டர்களையும் புலிகள் கைப்பற்றினர். அவை பின்னர் அழிக்கப்பட்டன.

### உதவிக்கு வந்த படை மீதும் புலிகளின் அணிகள் பாய்ச்சல்

மண்கிண்டிமலை இராணுவ முகாம் மீது புலிகள் பெரும் தாக்குதலை ஆரம்பித்ததும், அங்கு சிக்கிக் கொண்ட படையினருக்கு உதவுவதற்காக முந்திரிகைக்குளம், கோட்டைக்கேணி இராணுவ முகாம்களிலிருந்து படையினர் முன்னேறி வர முயன்றனர். அவர்கள் மீது விடுதலைப் புலிகளின் மற்றும் இரு அணியினர் கடும் தாக்குதலை நடத்தி அவர்களின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தினர்.

இதேவேளை—

பராக்கிரமபுர மற்றும் முந்திரிகைக்குளம் இராணுவ முகாம்களில் இருந்து சண்டை நடைபெற்ற பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. •

### 7 கிலோ மீற்றர் பிரதேசம் புலிகள் வசம் வீழ்ந்தது

நேற்றைய தாக்குதல் நடவடிக்கையின்போது மணலாற்றுப் பகுதியில் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த ஏழு கிலோ மீற்றர் நீளமான பிரதேசத்தை விடுதலைப் புலிகள் தமது பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### அதிகாரி ஒருவரும் பலி! ராணுவத் தரப்பு அதிர்ச்சி

நேற்றைய தாக்குதலில் படை அதிகாரி உட்பட 23 படையினரும் 15 பொது மக்களும் உயிரிழந்தனர் என்றும் — 24 படையினர் காயமடைந்தனர் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

ஆனால் ஆயுதங்கள் வைத்திருந்த பொதுமக்களே உயிரிழந்தனர் என்று பி. பி. ஸி. குறிப்பிட்டது.

### "இதயபூமி" நடவடிக்கை

நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய இராணுவத் தாக்குதல் நடவடிக்கைக்கு "இதயபூமி" எனப் பெயரிடப்பட்டிருந்தது.

வடதமிழீழத்தையும், தென் தமிழீழத்தையும் இணைக்கும்—தமிழீழத்தின் இதயம் எனப்படும்— மணலாற்றுப் பிரதேசத்தில் அமைந்துள்ள பாரிய இராணுவ முகாம் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

### விடாது விமான குண்டுவீச்சு

மண்கிண்டிமலை இராணுவ முகாம் மீதான தாக்குதல் ஆரம்பமானதும் அப்பகுதியில் ஸ்ரீலங்கா விமானப் படையின் "புக்காரா" மற்றும் "சியாமாசெட்டி" விமானங்கள், ஹெலிகள் ஆகியன கடும் குண்டு வீச்சுத் தாக்குதல்களை ஆரம்பித்தன

நேற்று அதிகாலை ஆரம்பமான இக்குண்டு வீச்சுத் தாக்குதல்கள் பகலிலும் தொடர்ந்தன.

### மிகப் பெரிய தாக்குதல்

நேற்று மண்கிண்டிமலை முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் — இந்த ஆண்டில் விடுதலைப் புலிகள் நடத்திய மிகப் பெரிய தாக்குதல்களில் ஒன்றாகக் கணிக்கலாம் என செய்தியாளர்கள் குறிப்பிட்டனர்.

மணலாற்றில் ஸ்ரீலங்காப் படைகள் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளும்போது அவர்களின் பிரதான விநியோக மையமாக இருந்த இப்பகுதியிலேயே நேற்று புலிகள் அதிரடித் தாக்குதலை நடத்தியிருக்கிறார்கள். இது இராணுவத் தலைமைப் பீடத்துக்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

## அள்ளப்பட்ட ஆயுத தளபாடங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 26

மணலாற்றில் நடத்திய துணிச்சல்மிக்க தாக்குதலின் போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுத தளபாடங்களின் விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| o ரி 56 - 2 ரகத் துப்பாக்கிகள் | — 65 |
| o ரி 56 - 1 ரகத் துப்பாக்கிகள் | — 52 |
| o ரி 56 புதிய ரகத் துப்பாக்கிகள் | — 2 |
| o ரி 81 ரகத் துப்பாக்கிகள் | — 13 |
| o 303 ரகத் துப்பாக்கிகள் | — 24 |
| o ஏ. கே. எல். எம். ஜி. | — 7 |
| o பி. கே. எல். எம். ஜி. | — 1 |
| o 60 மி. மீ. மோட்டர்கள் | — 5 |
| o 81 மி. மீ. மோட்டர் | — 1 |
| o வேட்டைத் துப்பாக்கிகள் | — 11 |
| o 803 ரக கைத்துப்பாக்கிகள் | — 4 |
| o ஆர். பி. ஜி. ஷெல் லோஞ்சர்கள் | — 7 |
| o கிபிட்டர் | — 1 |
| o ஆர். பி. ஜி. ஷெல்கள் (அன்ரி பேசனல்) | — 44 |
| o ஆர். பி. ஜி. தாங்கி எதிர்ப்பு ஷெல்கள் | — 76 |
| o புறோப்னர்கள் | — 188 |
| o 60 மி. மீ. ஷெல்கள் | — 131 |
| o 60 மி. மீ. வெளிச்சக் குண்டுகள் | — 26 |

(5-ஆம் பக்கம் பார்க்க)

### தாக்குதலில் துணைப் படையும் பெண் புலிகளும்

மண்கிண்டிமலை முகாம் மீதான தாக்குதலின் போது துணைப் படையினர் பெரும் பங்கை வகித்ததாக புலிகளின் குரல் அறிவித்தது.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகளின் பெண்போராளிகள் உட்பட சுமார் 200 பேர் கொண்ட புலிகளின் அணி ஈடுபட்டதாக தெரிகிறது. [illegible]

### 10 போராளிகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 26

மணலாற்றில் வீரகாவியம் படைத்து வீரச்சாவடைந்த பத்துப் போராளிகளின் விவரம் வருமாறு:-

★ லெப்டினன்ட் ஈழவேந்தன் அல்லது அமிர் (கந்தசாமி விமலேந்திரன் - கனகராயன்குளம் — வவுனியா)

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நிதி வர்த்தகத்தை நிறுத்த ஷப்றா நிறுவனத்தினர் முடிவு

### வைப்பாளர் முதலீடுகள் திரும்பச் செலுத்தப்படும்

கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் - தமிழர்களின் நிதிநிறுவனமாகச் செயற்பட்டு வரும் - ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட் நிறுவனம் தனது நிதித்துறை வர்த்தகத்தை நிறுத்திக்கொள்ள இருப்பதாகத் தெரிய வருகிறது.

[illegible] செய்திருக்கும் முதலீடுகள், முதலைனங்கள், சொத்துக்கள் ஆகியவற்றைத் திரும்பப்பெற்று, வாடிக்கையாளர்களின் வைப்புக்களை உடன் அவர்களிடம் திருப்பி வழங்க நிர்வாகம் முடிவு செய் திருப்பதாகவும் தெரிய வந்தது.

தமிழர்களின் நிறுவனம் என்பதாலும் —

யாழ்ப்பாணத்தில் கடந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரஸ் ஜவுளியகம்

## அதிர்ஷ்டலாபச் சேமிப்பு நிதி மீளளிப்பு பற்றிய

# அறிவித்தல்

எமது ஸ்தாபனத்தின் மேற்படி சேமிப்பு நிதியின் அங்கத்தவர்களுக்கு! உங்கள் புத்தக இலக்கங்களின் ஒழுங்கின்படி மண்டேலாரேடர் இல. 2, பஸ்நிலையம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் வைத்து பணம் மீளளிக்கப்படும். கீழே கொடுக்கப்பட்ட இலக்கங்களை உடையவர்களில் கொழும்பில் பணம் பெறாதவர்கள் மட்டும் எமது நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சேமிப்பு நிதிப் புத்தகத்தை சமர்ப்பித்து மேலுள்ள விலாசத்தில் பணத்தை பெற்றுக் கொள்ளவும்.

196 K. நடேசன், 202 N. சஞ்சீவி, 203 A. லோகநாதன், 209 S. குலதீபன், 214 K. சுவஸ்திகா, 215 M மனோகரன் 217 திருமதி K. சிவானந்தன், 220 S. பிரகாஷ், 221 செல்வி S. லோகநாதன், 222 S செல்வவிநாயகம், 226 S சிவானந்தன், 229 R. செந்தில்வதனா, 234 R. மதிவதனா, 235 திருமதி P. லோகநாதன், 239 K. கதிரேசபிள்ளை, 240 S.N. முத்தையா, 241 M. ரவீந்திரன், 242 செல்வி பிரசாந்தினிபாலச்சந்திரன், 244 L. கலைநாதன், 246—250 நியூ சிவாயம்ஸ், 255 G. டினேஷ், 262 S. ஜெயன், 264 R. ஜெயமதி, 265 திருமதி S. யோகராஜா, 267 P. தனலட்சுமி, 280 P. பிரேமஜா, 294 B. விக்கினேஸ்வரி, 295 S. லலித்குமார், 296 திருமதி M. ஞானப்பிரகாசம், 297 T. சந்திரராஜா, 404 T. ஜெயமதிராஜன், 406 K சுதர்சிகா. 422 K. லோகன், 425 J. சிவசங்கர், 426 N. ஜெயவர்த்தனா, 427 திருமதி J கலாமதி, 428 செல்வி A. கலாநிதி, 437 E. கைலாயபிள்ளை, 438 K. யுவநேசன், 456 R பிரபாகரன், 457 S. கனகராஜா, 459 ச. துளசி, 460 செல்வி C. சடாட்சரம், 461 செல்வி T சடாட்சரம், 463 R. விரசிங்கம், 470 K மாலினி, 485 N. குணரட்ணம், 487 S. மாணிக்கவாசகர், 488 M சிவராஜா, 498 K. ஸ்ரீஸ்கந்தராஜா மக்மில்லன் புத்தகசாலை, 499 K ஸ்ரீஸ்கந்தராசா மக்மில்லன் புத்தகசாலை, 500 K. ஸ்ரீஸ்கந்தராஜா மக்மில்லன் புத்தகசாலை, 501 K. ஸ்ரீஸ்கந்தராஜா மக்மில்லன் புத்தகசாலை, 502 K. ஸ்ரீஸ்கந்தராஜா மக்மில்லன் புத்தகசாலை, 503 K ஸ்ரீஸ்கந்தராஜா மக் மில்லன் புத்தகசாலை, 504 K ஸ்ரீஸ்கந்தராஜா மக்மில்லன் புத்தகசாலை, 505 K. ஸ்ரீஸ்கந்தராஜா மக்மில்லன் புத்தகசாலை, 506 K. ஸ்ரீஸ்கந்தராஜா மக்மில்லன் புத்தகசாலை, 507 K ஸ்ரீஸ்கந்தராஜா மக்மில்லன் புத்தகசாலை, 522 M. சுரேஸ், 523—524 P. கோணேஸ்வரன், 533, 534 M. பேரின்பநாதன், 541 J. சிவசங்கர், 542 திருமதி R. கலாராணி 555 துரைதியாகேஸ்வரன், 559 S. புஷ்பராஜா, 565 கீதாசினி விநாயகமூர்த்தி, 566 M. சுவர்ணா, 567 T. A. தம்பித்துரை, 569 A. சுதர்சினி, 570 லக்ஷ்மன் யூட், 571 R. ரஞ்சிதமணி, 572 P. சிவானந்தராஜா, 573 S. நவரட்ணம், 574 B. ஜெபப்பிரதன், 578 E. சற்குருநாதன், 579 E. அனுசம்யா, 580 K. கௌரி, 585 N. ஜெயரஞ்சினி, 592 T. ராஜசிங்கம், 593 T ராஜசிங்கம், 596 — 600 நியூ ஆனந்தாநகைமாளிகை, 602 N. லங்கேஸ்வரன், 605 K. லோகதாதன், 606 V. A. சிவராஜா, 612 G. சந்திரிகா, 616 P. ரஜன், 632 T பூபாலசிங்கம், 637 N பத்மகேஸ்வரன், 638 S ராஜதுரை 640 N. P. சம்பந்தபிள்ளை, 648 திருமதி R. சிவராஜா, 650 T. விவேகானந்தன், 654 S. பாலச்சந்திரன், 655 S. லோகநாயகி, 656 S. கதிர்காமநாதன், 658 யேசுநாயகம், 659 பிள்ளையார், 670 V. ஆனந்தமயில், 679 S. தயாபரநாதன் 682 A. N. தனபாலசிங்கம், 685 S. கோபாலகிருஷ்ணன், 687 S. மகேந்திரன், 688 S சிவகனேசன், 689 T. பவ ஸ்ரீதேவி, 692 I. பாலசிங்கம், 693 R இராசதுரை, 694 S. விமல்ராஜ், 695 R. தவகோபால் 699 S. அசோக்குமார், 700, S ஸ்ரீப்பிரியா, 709 S. கிறிஸ்தோபர், 713 M. S. மனோகரன், 715 N. தனுஷ்யன், 716 T. நிதர்ஷன், 717 R கங்காதேவி, 718 K. அருள்நேசன், 720 K. விக்னேஸ்வரன், 732 R. குணரட்ணம், 733 K கஜரூபன், 736 S. சின்னராஸ், 739 K இராமலிங்கம், 746 V மகாலிங்கம், 748 V. குமாரசாமி, 749 R சிவகாமி, 754 S. தயாபரநாதன், 755 K. ரவிஞ்சன், 759 V. சோமசுந்தரம், 762 S. வசந்தகுமார், 763 B. தயாளினி, 764 N. ராஜரட்ணம், 765 S ஞானசௌந்தரி, 770 R. இரத்தின சோதிராஜா, 776 S. ரவீந்திரன், 777 P சுரேஷ்குமார், 778 B. விமல தேவி 781 K. நடேசன், 789 V. ஜெயலலிதா, 790 V. விமலாதேவி, 791 V. வசந்தமலர், 792 A. இராசன், 793 T. தவசோதி, 794 — 798. V. பழனிபாண்டி, (பன்னீர்), 843 J. முத்தையா.

### பணம் வழங்குதல் பற்றிய விவரம் மேற்படி கடையில் அறிவிக்கப்படும்

*08 — 07 — 1993 வரை கொழும்பில் பணம் பெற்றுக் கொண்டவர்களின் விவரம் வருமாறு:*

464 T. சிவகந்தராசா, 469, 734, 725 செல்வி துரைரட்ணம், 179 S. சிவராஜா, 238 K. புண்ணியவதி, 517 I கந்தசாமி 405, 408 V. ராஜரட்ணம், 766 குபேரகுலசிங்கம், 259 R ஜஷ்யந்தி, 207 R கிருஷ்ண ரூபிணி, 195 R. உதயசங்கர், 194 K ரவீந்திரா, 227 K. துரைசிங்கம், 551 V. தனஞ்சயன், 545 V. கௌதமன், 539 R. அம்பிகைபாலன், 225 Y. குணசிங்கம், 200 N. சாந்தசொரூபன், 446 T. செல்வரட்ணம், 210 S பத்மநாதன், 162 திருமதி T. மீரா, 163 S. தேவரஞ்சன், 465 K ஞானகுமார், 722 K பாலச்சந்திரன், 594 G. கஜபதி, 582 G இமயவன், 441 K கணேசமூர்த்தி,, 109 B கணேசமூர்த்தி 49 K. விஸ்வநாதன், 549 A. முருகேசு, 550 T கமலாவதி, 112 R. நாகபூஷணி, 111 R. ஜெயரூபன், 115 N. ராஜரட்ணம், 126 R. நிஷாந்தி, 128 R. ரஜீவன், 129 R. ஜெசிந்தா, 458 V செல்வதாசன், 199 K. J. ரூபேந்திரன், 138 N. கோகுலவதனி, 479 N. யோகேஸ்வரி, 481 நவரட்ணராஜா, 771 K. இந்துமதி, 601 N. பாலச்சந்திர சர்மா, 206 P தாரணி, 205 K. பரமகுருநாதன், 652 T புண்ணியமூர்த்தி, 635 S. சுகுமார், 636 T யோகரட்ணம், 419 A ரொஷான், 610 திருமதி P. ஸ்ரீஸ்கந்தராஜா, 611 திருமதி V குமாரசாமி 293 K விஜயகுமார், 218 ஜெகநாதன்கோபி, 219 J. அனுராஜ். 292 மேரி மார்கிரட், 245 மேரி ஸ்டெல்லா ஜூஜின். 683 M ஜெயசீலன் வயலட், 141 V பரமசிவம், 231 A. திசைவீரசிங்கம், 232 T. குந்தவி, 696 V. நவநீதன், 834 —838 சோபிகா ஜூவலரி, 847 R. குமரேஷ், 83 J. ஆரோக்கியநாதன், 224 திருமதி J R. ஹென்ஸ்மன், 462 V. கதிர்காமநாதன், 544 K பிரசாந்தி, 546 K சிவசாந்தி, 684 K. கௌரி, 482, 484 V. வன்னியசிங்கம், 643 — 647 நியூலக்கிஸ்டார் நகை மாளிகை, 708 K இந்துராணி, 449 T. கண்ணன், 515 துர்காசெகிஸ், 519 மாணிக்கசிங்கம், 561 M துரைராஜா, 562 V உமா, 581 S. சுரேஷ், 653 T. பாஸ்கரன், 97 S பரமேஸ்வரி, 99 K. சிறீகாந்தன், 64 S. சதாசிவம், 442. 443 S. T. யோகதாஸ், 444 S. E. மரியதாஸ், 418 P. சிவகௌரி, 529 K ஜெயகுமார், 530 K உதயகுமார், 608 T. மோகனை, 257 — 258 A. பேரின்பராஜா, 281— 290 S. ஞானசேகரம். 159 R. சத்தியசீலன், 467 S. சத்தியா, 83 S. விநோதன். 11 M. இராசலிங்கம், 77, 113, 131, 140 149 M. யோகேஸ்வரன், 508— 510 K சிவபாஸ்கரன், 192 S. ரெஜிஸ், 556 அல்வின் பூமணி, 730 K பஞ்சலிங்கம், 731 சு சிவபாக்கியம், 772 P. குணரட்ணம், 557 A. உஷா, 558 Y. ஆன் வேஜினி, 757 A. மேரி, 769 பளீல்செல்வி, 780 R. அமலநாயகி.

முக்கிய குறிப்பு: எம்மால் வழங்கப்பட்ட சேமிப்பு நிதி வைப்புப் புத்தகங்கள் இன்றி ஒருவருக்கும் பணம் மீளளிக்கப்படமாட்டாது.

மேலதிக தொடர்புகளுக்கு:

**K. B. பரமநாதன்,**

16, 6 ஆவது ஒழுங்கை,
சென்ற் பெனடிக்ற் மாவத்தை,
கொழும்பு - 13
தொலைபேசி எண் 327443

(சி-5508)

---

## சண்டிலிப்பாயில் இளைஞர் காயம்

வெறுமையான துப்பாக்கி ரவைக்குள் நெருப்புக்குச்சி மருந்தை அடைத்து கல்லால் குத்திப் பார்த்த போது அது வெடித்ததில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

சண்டிலிப்பாய் வடக்கில் நேற்று மாலை இடம் பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த பாலசிங்கம் சுதாகரன் [வயது 16] என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-15)

---

கறுப்பு ஜூலை பத்தாண்டு நினைவு

## குடாநாட்டில் நாளை முக்கிய 3 கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 26

சிங்கள இனவெறியை வெளிக்காட்டிய 1983 ஜூலை கலவரங்களின் 10 ஆம் ஆண்டு நினைவாக நாளை செவ்வாய்க்கிழமை குடாநாட்டில் மூன்று முக்கிய கூட்டங்கள் இடம்பெறவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைச் செயலகம் செய்துள்ளது.

நாளை இரவு 8 மணிக்கு கூட்டங்கள் ஆரம்பமாகும்.

★ தீவகப் பிரிவுக்கான கூட்டம் நாரந்தனை லவனிதா குடியிருப்பிலும்—

★ வலிகாமம் பிரிவுக்கான கூட்டம் சங்கானை நிகரவைரவர் கோயிலடியிலும்—

★ வடமராட்சிப் பிரிவுக்கான கூட்டம் வல்வெட்டி திருவில் மைதானத்திலும் நடைபெறும். (ஒ)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### மகா பொலக் கொடுப்பனவு

7ஆம் தவணைப் பணம்

பல்கலைக்கழக மாணவர்களுக்கான 7ஆம் தவணை மகாபொலக் கொடுப்பனவுகளை 26 — 07 - 93 முதல் வழங்க பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக் கிளையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இக்கொடுப்பனவுகள் பற்றிய முழு விவரங்களும், அறிவுறுத்தல்களும் பல்கலைக்கழக விளம்பரப் பலகைகளில் இடப்பட்டுள்ளன. இதற்கமைவாக கொடுப்பனவை உரித்துடைய மாணவர்கள் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

-பதிவாளர்.

(சி-5504)

---

கலட்டி எச்சாட்டி மஹாமாரியம்மன்

## பூங்காவனத் திருவிழா

இன்று (26—07—1993) திங்கள் மாலை 6 மணிக்கு பிள்ளையார், அம்பாள், முருகன் ஆகிய மும்மூர்த்திகளும் மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட பூச்சப்பரத்தில் வீதியுலாவரும் காட்சி இடம்பெறும்.

### விசேட நிகழ்ச்சிகள்

*நாதஸ்வரம்*

இசைப்பேரறிஞர், கான ஞானதீனு, கலைச் சக்கரவர்த்தி சாவகச்சேரி N. M. பஞ்சாபிகேசன்

நாகேந்திரன் குழுவினர்

இலக்கிய சொற்பொழிவு

இன்றைய இளம் தலைமுறையின் இதயம் கவர்ந்த இனிய பேச்சாளர் செல்வன் பிரசாந்தன்
(யாழ். இந்துக் கல்லூரி- மாணவன்)

✶ அனைவரும் திரண்டு வருக ✶

கலட்டி அம்மன் இளைஞர்கள்

(26683)

---

## சேவைநலம் பாராட்டுவிழா

*இசைப்பேராசிரியர்*
பொன். தெய்வேந்திரன் [S. L. E. A. S. II]
(முன்னாள் உபஅதிபர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)
அவர்களின்

அகவை அறுபது பூர்த்தியையும்,
35 வருட ஆசிரிய சேவையையும்
குறித்து நடைபெறும்.

காலம்:- 28—07—1993 புதன்கிழமை
பிற்பகல் 2 மணி

இடம்:- யாழ்/ டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி.

நுண்கலை ஆசிரியர்கள், ஆதரவாளர்கள்
அனைவரையும்
✶ அன்புடன் அழைக்கின்றோம் ✶

தென்மராட்சி இசை ஆசிரியர்களும்,
பழைய மாணவர்களும்.

(26680)

---

## விக்னா

கல்வி நிறுவனம்

94

அலகு ரீதியான

வினா - விடை மீட்டல்

*ஆரம்பம்:*
01 - 08 - 1993
9-00 மணி

பொருளியல்—
திரு. கலாகரன்
12 - 00 — 1 - 30

வர்த்தகம்—
திரு. தேவா
10 - 00 — 11 - 00

கணக்கியல் —
திரு S. K. பிரபாகரன்
2 - 00 — 4 - 00

அளவையியல் —
திரு. விக்கி
11 - 00 — 12 - 00

தமிழ்—
திரு. குழந்தை
10 - 00 — 11 - 00

இந்துநாகரிகம் - சமயம்—
திரு. காரைசுந்தரம்பிள்ளை
12 - 00 — 1 - 00

புவியியல்—
திரு. குணராசா
9 - 00 — 10 - 00

அரசியல்—
திரு. ஜெயகாந்தன்
9 - 00 — 10 - 00

வரலாறு—
திரு. சிறீதரன்
1 - 00 — 2 - 00

(இ/5523)

---

## நான்காம் ஆண்டு நினைவலைகள்

| பிறப்பு | | அழிப்பு |
|---|---|---|
| 09 | | 26 |
| — |  | — |
| 12 | | 07 |
| — | | — |
| 1966 | | 1989 |

### செல்வன் கந்தசாமி சிவகுலசிங்கம்

(இராசன்)

(பேருந்து நடத்துநர், பருத்தித்துறை)

நாலாண்டு சென்றதையா செவ்விதழ் அசைவு கண்டு
அந்நியன் வரவால் அநியாயம் நடந்தது
உனைக்கண்டு பேசிட பொன்மேனி இங்கில்லை
நீதி கேட்டிட பாண்டியனும் இங்கில்லை
என் செய்வோம் செல்வமே
அநீதி அழிந்து நீதி நிலவட்டும்
அதுவரையில் நீயுறங்கு எம் இராஜா!

- குடும்பத்தினர்.

தென்புலோலி. (6357)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4ஆம் ஆண்டுநினைவஞ்சலி

அன்னை மடியில்: 17 — 06 — 1966



அரக்கரின் பிடியில்: 26 — 07 — 1989

செல்வன்

### இராமசாமி சிறீபத்மநாதன்

(யா/ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவனும்/தேசிய தொழில் பயிற்சிச் சபை டீசல் இயந்திரப் பொறியியல் மாணவனும்/வடபிராந்திய போக்குவரத்துச்சபை, மருத்திரத்துறை)

பாசப் பூங்காவில் பசுமையாக மலர்ந்து
அன்பின் அகல் விளக்காய் அன்றுவரை ஒளிர்ந்து
பண்பின் சுடரொளியாய் பாரினிலே மிளிர்ந்து
பொறுமைக்கு நீங்கள் ஓர் பொக்கிசமாய் வாழ்ந்து
வறுமையது வந்தும் வாடாமல் இருந்து
கடமை, கண்ணியம், கட்டுப்பாடு-என்று
காலைவேளையிலே சாலைக்கு வேலைக்காய்-
சென்ற போது

எம் ஆசைச் சிறியே
சோலைக்குள் இருந்த கொடியவரோ
கொடுமையாக அன்று - உன்னை...
தாங்க இயலாமல் தொடர்ந்தாளே
தாயவளும் உந்தன் பாதை
ஆண்டுகள் நான்கு ஆனாலும் ஆறாது உம் துயரம்.

உம் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

அப்பா, சகோதர, சகோதரிகள்,
அண்ணிமார், அத்தான்மார்,
மருமக்கள், பெறாமக்கள்,

'குரும்பசிட்டி'
புலோலி தெற்கு.

(26668)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி இரத்தினம் செல்லத்துரை

தோற்றம்: 02 — 07 — 1911
மறைவு: 26 — 06 — 1993

எங்களை பெற்று வளர்த்து ஆளாக்கிய எங்கள் அன்புத் தெய்வம் எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து சென்ற போதிலும் உங்களது நினைவலைகள் எம்மை விட்டு நீங்காது நிலைத்திருக்கும்

மகன் தவபாலச்சந்திரன் குடும்பம்,
மருமகன் பொ. சந்திரசேகரம் குடும்பம்,
மருமகன் செ. சண்முகநாதன் குடும்பம்.

"ஞானகிரி"
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(26639)

2ஆம் ஈழப்போரின் மட்டும்

# திருமலையில் தமிழரின் 25 ஆயிரம் வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம், ஜூலை 26
திருகோணமலை மாவட்டத்தில் இரண்டாம் ஈழப் போர் காலத்தில் சேதமடைந்த வீடுகள் இன்னமும் திருத்தப்படவில்லை.

இரண்டாம் ஈழப் போரின் போது இராணுவ நடவடிக்கையால் தமிழ் மக்களுக்குச் சொந்தமான 25 ஆயிரம் வீடுகள் சேதமடைந்துள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கும் என்று மற்றொரு தகவல் தெரிவித்தது.

இதே சமயம், முதலாம் ஈழப் போரின்போது சேதமடைந்த வீடுகளும் இன்னும் திருத்தப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(த-3)

## சுந்தரர் குருபூசை விழா

யாழ்ப்பாணம், ஜூலை 26
நாயன்மார்களில் ஒருவரான சுந்தரமூர்த்தி நாயனாரின் குருபூசை இன்று குடாநாட்டின் கோயில்கள், பாடசாலைகள், மதஸ்தாபனங்களில் கொண்டாடப்படவுள்ளது.

### கந்தர்மடத்தில்

கந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீடம், வேதாந்த மடத்தில், இன்றுதிங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு குருபீடாதிபதி ஸ்ரீ மத் சோமாஸ்கந்த வேள் சுவாமிகள் தலைமையில் பெரியபுராண முற்றோதல் பூர்த்தி விழாவும், சுந்தரர் குருபூசை விழாவும் கொண்டாடப்படவுள்ளன.

இவ்விழாவில் மெஞ்ஞான வாரிதி சபாரத்தின ஈஸ்வர சர்மா, திரு.ச. விநாயகமூர்த்தி (யாழ். பல்கலைக்கழகம், ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

### பொலிகண்டியில்

பொலிகண்டி கந்தவனத்தில் அமைந்துள்ள சாரதா சேவாச்சிரமத்தில் சுந்தரர் குருபூசை இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும். இன்றைய தினம் ''சுந்தரர் காட்டிய தோழமை நெறி'' என்ற தொடரில் சுவாமி சித்ரூபானந்தா சொற்பொழிவாற்றுவார் இதனைத் தொடர்ந்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வசனபாகத்தில் உள்ள சரித்திரம், இளைப்பாறிய அதிபர் திரு. வே. நடராசா வினால் வாசிக்கப்படும்

(க)

### ஏழாலையில்

ஏழாலை மேற்கு மடாலய சருணாகரப்பிள்ளையார் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை பகல் 12 மணிக்கு சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசையும் மகேசுர பூசையும் நடைபெறும்.

(க-45)

### நீராவியடியில்

சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை இன்று திங்கட்கிழமை வண்ணை நீராவியடி மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் காலையும், மாலையும் நடைபெறவுள்ளது.

காலையில் நால்வர் திருமுறை, திருக்கோவை, திருமந்திரம், திருக்குறள் என்னும் நூல்களில் சைவசித்தாந்தம் என்னும் கலந்துரையாடலும், மாலையில் புராணப்படிப்பு தோழமை, என்னும் தலைப்பில் சொற்பொழிவும் நடைபெறும்.

இவ்வைபவத்தை நால்வர் திருமுறை மன்றம் நடத்துகிறது.

### சரசாலையில்

சரசாலை இந்து மன்றத்தினர் ஏற்பாட்டில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை இன்று மாலை 5 மணிக்கு சரசாலை - நுணாவில் அருள்மிகு ஸ்ரீ சிதம்பர விநாயகர் ஆலயத்தில் நடைபெறும்.

### ஆனைக்கோட்டையில்

ஆனைக்கோட்டை மூத்தநயினார் கோயிலில் இன்று திங்கள் பிற்பகல் 4-30 மணிக்கு சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை இடம்பெறும். கம்பன் கழகத்தைச் சேர்ந்த ஆசிரியர் இ. நந்தகுமாரின் சிறப்புச் சொற்பொழிவும் அன்றைய தினம் இடம்பெறும்.

இதே வேளை—
அளவெட்டி சைவ வாலிப சங்கத்தினரின் ஏற்பாட்டில் அளவெட்டி கும்பழாவளை பிள்ளையார் ஆலயம், மாகியம்பதி சண்டிலிப்பாய் அங்கணாமைக் கடவை அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயம், வண்ணை அருள்மிகு வாலாம்பிகை சமேத விசுவலிங்க வைத்தீசுவர சுவாமி கோயில் (வண்ணை சிவன்) ஆகியவற்றிலும் இன்று சுந்தரர் குருபூசை நடைபெறும்.

(த-30)


நேற்றைய உதயன் 5ஆம் பக்கத்தில் பிரசுரமான ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் நூல் வெளியீட்டு விழா

சிறப்பிதழ் அன்பளிப்பு:
திரு.த. குகனேசன்
அவர்கள்
சாவகச்சேரி


## தொலைக்கல்வி ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 26
யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து தொலைக் கல்வி சிரேஷ்ட போதனாசிரியர்களும் இன்று திங்கள் முற்பகல் 9 மணிக்கு யாழ். கல்வி அலுவலகத்தில் தம்மை சந்திக்குமாறு தொலைக்கல்வி இணைப்பாளர் திரு. துரை தியாகராஜா கேட்டுள்ளார்.

(இ-5)

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



### ஷாலினி சாந்தகுமார்

திருநெல்வேலி கிழக்கு, அரசடி ஒழுங்கையைச் சேர்ந்த சாந்தகுமார் - செல்வம் தம்பதிகளின் அன்புப் புதல்வி ஷாலினி இன்று 26 - 07 - 1993 இல் தனது முதலாவது பிறந்த நாளை ஊரெழுவில் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அண்ணா நிஷாந், அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பா, சித்தி, அத்தைமார், மாமாமார், மைத்துனர், பெரியம்மா, அண்ணன்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பத்திரகாளித் தாயாரினதும் நயினை அம்மனினதும் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

(26673)


பாசையூர்
சென். அன்ரனிஸ் வி. க. நடத்தும்

சென். அன்ரனிஸ் கேடயத்துக்கான

உதைபந்தாட்டப் போட்டி

விண்ணப்ப முடிவு திகதி
31 - 07 - 1993
- செயலாளர்.

(26671)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

5 அடி நீளமும், 4 அடி அகலமும், 1½ அடி உயரமும் உடைய, தகரத்தால் அமைக்கப்பட்ட, கார் ரயர் பொருத்தப்பட்ட வண்டில் விற்பனைக்குண்டு 122, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (26674)

புதிய லுமாலா ஆண்கள் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு விலாசம்; கா. சிவதாசன், இல. 6, பெனிற் கொஸ்தே ஒழுங்கை, கண்டி வீதி, கச்சேரியடி, சுண்டிக்குளி. (26655)

புதிய இரும்பில் செய்யப்பட்ட கடைக்குரிய சுருக்குச் சேற்றுகள் நான்கு விற்பனைக்குண்டு. உயரம் 8 அடி, நீளம் 15 அடி ஒன்றும், உயரம் 8 அடி, நீளம் 10 அடி ஒன்றும், உயரம் 8 அடி, நீளம் 4 அடியில் இரண்டு சேற்றுக்களும். தொடர்பு: சு. கோபாலபிள்ளை, 63/3, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, கச்சேரியடி [26642]

### உடன் விற்பனைக்கு

பத்து நாட்கள் வளர்ச்சி அடைந்த புறொயிலர் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. "மல்லிகா பதி", மானிப்பாய். (26629)

### தேவை

சண்டிலிப்பாய், உடுவில் அரசாங்க அதிபர் பிரதேசத்தில் சிறிய அளவில் வயல்காணி குத்தகை அடிப்படையில் தேவை. இட பரப்பளவு விவரங்களுடன் தொடர்பு: இல. 546 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (26669)

வீட்டு வேலைக்கு உதவியாக 45 வயதிற்கு மேற்பட்ட ஆரோக்கியமான பெண் தேவை. இல. 547, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (26670

5 வருட அனுபவமுள்ள பக்கம் கட்டுபவர், பைண்டர், அச்சுக்கோப்பவர் (பெண்) தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும்: ஏ. எஸ். ஜே. பிறின்ரிங் வேக்ஸ், மல்லாகம். (6604

புதிதாக ஆரம்பிக்கும் குளிர் பானசாலைக்கு பெண் காசாளர், பில் போடுபவர், சப்ளை செய்பவர்கள், உதவி சிறுபையனும் இதிலே அனுபவமுள்ள, பங்காளரும், ஸ்ருடியோ வேலைகள் தெரிந்தவரும் தேவை. நியூ சித்திரகலா ஸ்ருடியோ, சுன்னாகம். (6603)

### புலமைப் பரிசில் பரீட்சை

Bond கல்வி நிறுவனத்தால் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும் ஆண்டு - 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரிப் பயிற்சி வினாத்தாள்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை, கமிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம் S. K சாமி- நெல்லியடி, பளிங்கு-சாவகச்சேரி ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம். (6366)

### கல்வி

G C E O/Lவில் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும், தவணைப் பரீட்சைகளில் கணித பாடத்தில் குறைந்த புள்ளிகளைப் பெற்றவர்களுக்கும் 26வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறு பேற்றிக்குக் கற்பிக்கப்படும். க. ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (6375)

### ENGLISH

English Grammar for G. A Q. (E. S. L) Spoken English, G. C. E. (O/L) விரிவான விளக்கத்துடன் ஆங்கிலம் தனிப்பட்ட முறையிலும் பொதுவாகவும் கற்பிக்கப்படுகிறது. Mr R Sivalingam, (Dip in-English) புதிய ஆங்கிலக் கல்வி நிலையம், ஆரியகுளம், யாழ்ப்பாணம். (இ-5620)

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து எத்தகைய அறிவு மட்டம் வரைக்கும் என்றாலும் தனிப்பட்ட முறையிலும் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (6358)

## BECON

கல்வி நிறுவனம்

Stanley Road, Jaffna

## 94 - A/L

தூய/ பிரயோக கணிதம்

**திரு. கிருஷ்ணா**

செவ்வாய், வியாழன் 4. 00 — 6. 00

ஆரம்பம்:

**05 — 08 — 1993**

வியாழன் 4. 00 மணி

(இ-5606)

இணுவில் - கோண்டாவில்

## காரைக்கால் சிவன் கோயில்

## மஹோற்சவ 5ஆம் திருவிழா

## விஞ்ஞாபனம்

காலம்: இன்று 26 - 07 - 1993 திங்கட்கிழமை காலை 8 மணி

108 சங்காபிஷேகமும்

அதனைத் தொடர்ந்து மாலை 5 மணிக்கு நாதஸ்வர தவில் கச்சேரிகளும் இடம்பெறும்.

| | |
|---|---|
| S. சிவகரன் குழுவினர் | — இணுவில் |
| K உதயநாதன் குழுவினர் | — இணுவில் |
| K R. சுந்தரமூர்த்தி குழுவினர் | — இணுவில் |
| K R புண்ணியமூர்த்தி குழுவினர் | — இணுவில் |
| K. நித்தியானந்தம் குழுவினர் | — இணுவில் |
| V K. கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி குழுவினர் | — கோண்டாவில் |
| P. நாகேந்திரன் குழுவினர் | — சாவகச்சேரி |
| N K பத்மநாதன் குழுவினர் | — அளவெட்டி |
| T. உதயசங்கர் குழுவினர் | — அளவெட்டி |

8.30 — 9.30 மணி வரை

செஞ்சொற் செல்வன்

**திரு. ஆறு. திருமுருகன்**

அவர்களின் தொடர் சொற்பொழிவு

பொருள்: **விநாயக புராணம்**

9.30 மணிக்கு

கலாவிநோதன் - வில்லிசைப் புலவர்

**க. நா. கணபதிப்பிள்ளை**

(சின்னமணி)

வில்லிசை

பொருள்: **பார்வதி கல்யாணம்**

- 5ஆம் திருவிழா உபயகாரர்.

26668)

## விதை உருளைக்கிழங்கு விநியோகம் 1993/94

எதிர்வரும் 1993/94 காலபோகத்திற்குத் தேவையான டிசிறி இன விதை உருளைக்கிழங்கை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன இதற்குத் தேவையான முழுப் பணத்தையும் முற்பணமாகச் செலுத்தியே பெறவேண்டியுள்ளது. எனவே விதை உருளைக்கிழங்கு பெறவிரும்பும் விவசாயிகள் தமது பிரதேச கமநலச் சேவை நிலையங்களில் அந்தர் ஒன்றுக்கு ரூபா 3,500/- வீதம் 10-8-1993ற்கு முன்னர் பணத்தைச் செலுத்தி, பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

ஒவ்வொரு கமநலச்சேவை நிலையத்திலும் விதை உருளைக்கிழங்கு பெறும் விவசாயிகளின் எண்ணிக்கை கமநலச் சேவை நிலைய ரீதியாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், ஒரு விவசாயிக்கு 4 அந்தர் மட்டுமே வழங்கப்பட உள்ளதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட உதவி ஆணையாளர்,
கமநலசேவைத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

உதவி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்)
யாழ்ப்பாணம்.

கமநலசேவைகள் திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
1993-07-20. (இ-5517)

## வீடு தேவை

சண்டிலிப்பாய் சிரணிச்சந்திக்கும், திருவள்ளுவர் சனசமூக நிலையத்திற்கும் (எழுமூவிளி) இடைப்பட்ட பகுதியில் எமது அலுவலகப் பாவனைக்கு வாடகைக்கு வீடு தேவை. சம்பந்தப்பட்டவர்கள் தயவு செய்து உடனடியாக மானிப்பாய் நகரமண்டபத்தில் இயங்கி வரும் வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை விசேட ஆணையாளருடன் தொடர்பு கொள்ளவும். (சி/5514]

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வன் பரமகுரு ஸ்கந்தகுமார்**

(பழைய மாணவன், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், ஹாட்லிக் கல்லூரி)

பிறப்பு: 13 — 10 — 1969

அன்னியர் அழிப்பு: 26 — 07 — 1989

திதி: 11 — 08 — 1993

எங்கள் அன்புச் செல்வமே! தம்பி!!

தங்கள் ஆத்ம சாந்திக்கு இறைவனை என்றும் பிரார்த்திக்கும்.

ஐயா, அம்மா, அக்கா,
உறவினர்கள், நண்பர்கள்.

"முத்து மாளிகை"
பருத்தித்துறை. (26614)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்லப்பா சிவசாமி**

(நாதன் ஸ்ரோர் உரிமையாளர், புங்குடுதீவு 4)

தோற்றம்: 05—10—1921

மறைவு: 05—08—1992

தந்தையே உனை பிரிந்து ஆண்டு ஒன்று ஆனதுவோ
அன்பான அணைப்பெனும் ஆறாத வேதனையோ!
உங்களையே வருத்தி எங்களைக் காத்தீர்களே!
ஊர் போற்றும் நிலைக்கெம்மை உயர்த்தி விட்டீர்களே ஐயா
உண்மை நீ உயிரும் நீ நம் உண்மை தெய்வம்நீயே.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

இல. 4. பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி. (இ/5511)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### மலையகத் தமிழர் மீது பொறாமை!

இன்னும் சில வருடங்களில், வடக்கு - கிழக்கைப் போன்றே இன்றைய அரசாங்கத்தால் மலையகத்தையும் பரிபாலிக்க முடியாதநிலை ஏற்படும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தென்னிலங்கையின் ஆரம்ப அரசியல்வாதிகளில் ஒருவர். தென் மாகாண சபையின் ஐனநாயக ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினரான மகிந்தா யாப்பா அபேவர்த்தனாவே அந்த ஆரம்ப அரசியல்வாதி.

அவரது பேச்சில் இரண்டு முக்கிய விடயங்கள் தெளிவாகத் தெரிகின்றன. தெற்கின் இளம் அரசியல் வாதிகளும், தமது முந்திய சந்ததியினரைப் பின்பற்றி, தமிழர் விவகாரம் ஒன்றை வைத்தே— தமிழர்களுக்கு எதிரான ஒரு கருத்தை முன்வைத்தே— அரசியலில் முன்னுக்கு வருவதற்கு, வாக்குத் திரட்டுவதற்கு முற்படுகிறார்கள். தமிழர்களுக்கு எதிராகப் பிரசாரம் செய்வதாலேயே தமக்குரிய வாக்குப்பலத்தைப் பெருக்க முடியும் என நம்புகிறார்கள். இது முதலாவது.

தமிழர்கள் இலங்கையின் எந்தப் பிரதேசத்தில் வாழ்ந்தாலும் அவர்கள் உரிமைகள் அற்றவர்களாக அடிமைகளாகவே வாழவேண்டும் என்ற மனப்பதிவு சாதாரணமாக எல்லாச் சிங்களவர்களிடமும் நஞ்சாக ஊறியிருக்கிறது. இதனையும் அவரது கருத்து எடுத்துக் காட்டுகிறது இது இரண்டாவது அம்சம்.

மேற்சொன்ன இரண்டு அம்சங்களும் நாணயத்தின் ஒருபக்கம். அடுத்த பக்கத்தைப் பார்ப்போம்.

இப்போது வடக்கு கிழக்கில் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது அதற்கு மூல காரணம் யார்? தமிழர்களா? இல்லை; சிங்களவர்களே. வெளிநாட்டார் அடக்கு முறையில் இருந்து, ஏகாதிபத்தியத்திலிருந்து விடுபட்ட தாமும் தமிழர்களும் சமத்துவமாக, சம உரிமைகளுடன் வாழவேண்டும் என்ற தாராள மனம் சிங்களவர்களுக்கு இருந்திருப்பின், இன்றைய நெருக்கடிதோன்றியிருக்கமாட்டாது

சிங்களவர்கள் இந்த நாட்டின் பெரும்பான்மையினர். அவர்களே முன்னர் குடியேறிய மூத்த குடிகளுமாவர். ஆகையால் சிறுபான்மையினரும், பின்னர் வந்தவர்களுமான தமிழர்களுக்கு சம உரிமை கொடுப்பதில்லை என்று சிங்களத் தலைவர்கள் முடிவு செய்தனர். அந்த முடிவின் விளைவுதான் இன்றைய வடக்கு - கிழக்கு நெருக்கடியும் அதன் பெறுபேறுகளும்!

மலையகத் தமிழர்கள் பிரிட்டிஷ்காரரால் கூலிகளாகக் கொண்டு வந்து குடியேற்றப் பட்டவர்கள். ஆகவே அவர்கள் தமது மனித உரிமைகளுக்கோ, வாழ்வியல் உரிமைகளுக்கோ' சனநாயக உரிமைகளுக்கோ, ஆட்சி உரிமைகளுக்கோ அருகதையில்லாதவர்கள் என்று சிங்களவர்கள் நினைக்கிறார்கள்.

சிங்களக் கட்சிகள் தேர்தலில் வெற்றி பெறுவதனை நிச்சயிக்கும் அலகாக (Factor) மலையக மக்கள் விளங்குவதால் அவர்களுக்கு ஒரு சில சில்லறை உரிமைகளைக் கொடுத்து அடிமை நிலையில் வைத்திருக்கவே விரும்புகிறார்கள், ஒரு மனிதனுக்குரிய அடிப்படை வசதிகளையும், நாட்டு வளங்களையும் மலையகத் தமிழர் அனுபவிப்பதை சிங்களவர்கள் விரும்பவில்லை. பொறாமைப் படுகிறார்கள்.

ஆகையால் மலையகமும் இன்னும் ஒரு சில வருடங்களிலேயே மற்றொரு வடக்கு - கிழக்காகி விடும். விதைத்ததுதான் முளைக்கும். எனவே சிங்கள அரசியல் வாதிகளும், பேரினவாதிகளும் மலையகத்தில் இப்போது விதைக்கும் தமிழர் விரோதம் என்ற வினை, நிச்சயமாக அவர்களையே மீண்டு வந்து பற்றிக்கொள்ளும்!

## யாழ் நிலை பற்றிய அறிக்கை ஜனாதிபதி செயலகத்துக்கு!

யாழ்ப்பாணம், ஜூலை 26

யாழ். மாவட்டத்தின் உணவு, சுகாதாரம், போக்குவரத்து நிலைமைகள் மற்றும் அகதிகள் நிலை ஆகியவை சம்பந்தமான விவரமான தள அறிக்கையை ஜனாதிபதி செயலகம் யாழ். அரச அதிபரிடம் கோரியுள்ளது.

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய அவசர நடவடிக்கைகள், தேவைகள் பற்றியும் கேட்கப்பட்டிருப்பதாகத் தெரியவந்தது.

## யுத்தகைதிகளுக்கு ஆதரவாக அம்பாறையில் ஊர்வலம்

யாழ்ப்பாணம் வந்து திரும்பிய யுத்தக் கைதிகளின் உறவினர்கள் தலைமை ஏற்று அரசுக்கு எதிராக அம்பாறையில் ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

யுத்தக் கைதிகளின் உறவினர்கள் ''புலிகளின் குரல்'' வானொலிக்கு இவ்வாறு தெரிவித்தனர்.

இந்த ஊர்வலத்தில் சிங்கள விவசாயிகள், ஆசிரியர்கள், பௌத்த குருமார்கள் போன்றவர்கள் கலந்து கொண்டதாக தாம் அறிவதாகவும் யுத்தக் கைதிகளின் உறவினர்கள் மேலும் தெரிவித்தனர். (ஒ 3)

## யுத்தக் கைதிகள் உண்ணாவிரதம்:

## விவரமான கடிதங்களுடன் உறவினர் இருவர் பயணம்

யாழ்ப்பாணம், ஜூலை 26

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள யுத்தக் கைதிகள் எதிர்வரும் 29 ஆம் திகதி உண்ணாவிரதம் ஆரம்பிப்பது குறித்த விவரங்கள் அடங்கிய கடிதங்களுடன் அவர்களின் உறவினர்கள் இருவர் நேற்று கொழும்பு பயணமானார்கள்.

பி. ஈ. அதுக்கோறள, ஆர். எம். அஜித்குமார ஆகியோரே கொழும்பு சென்றனர்.

எதிர்க் கட்சிப் பிரமுகர்கள், பிரிகேடியர் ஆனந்த வீரசேகர, ஆங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோ மற்றும் பௌத்த பிக்குகளின் தலைவர்களுக்கு கடிதங்களை இவ்விருவரும் நேரடியாச் சென்று கையளிப்பர் என்று யுத்தக் கைதிகளின் உறவினர்கள் 'புலிகளின் குரல்' வானொலிக்குத் தெரிவித்தனர்.

## ஓர் ஓட்டத்தினால் இந்தியா வெற்றி

கொழும்பு, ஜூலை 26

முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி ஓர் ஓட்டத்தினால் இலங்கை அணியைத் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 212 ஓட்டங்களை எடுத்தது.

இலங்கை அணி 49.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 211 ஓட்டங்களை எடுத்தது.

இலங்கை அணியின் சார்பில் ஹத்துருசிங்க 64 ஓட்டங்களையும் அரவிந்த டீ சில்வா 62 ஓட்டங்களையும் எடுத்தனர். இந்திய அணியின் சார்பில் அணித்தலைவர் அஸாருதீன் 52 ஓட்டங்களை எடுத்தார்.

## இன்று

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோயில் வருடாந்த மஹோற்சவம் சம்பந்தமான கூட்டம் ஒன்று இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கோயில் பொது அலுவலக மண்டபத்தில் நடைபெறும். உற்சவகால பணியாளர் நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் இக்கூட்டத்தில் பங்குபற்றுவார்கள். (க-45)

## நல்லூர் உற்சவகால நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 26

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை ஒட்டி ஆலயச் சுற்றாடலில் இன்று நடைபெற இருக்கும் நிகழ்ச்சிகள் வருமாறு:-

★ நல்லை ஆதீன குருமூர்த்தி மண்டபத்தில்—

பிற்பகல் 2-3 மணி: ஐந்து முகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்'' என்னும் பொருளில் சிவஸ்ரீ கை. திருஞானசம்பந்தக் குருக்கள் சமயச்சொற்பொழிவு.

பிற்பகல் 5-15—6-15 மணி; ''அருட்திருமேனி'' என்னும் பொருளில் பிரசங்க பூஷணம் ந. சிவசண்முகமூர்த்தி இசைப் பேருரை.

★ மேற்கு வீதி ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில்—

மகாபாரதம் குறித்து கான கதாவாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா இசைச் சொற்பொழிவு.

★ நாவலர் மணி மண்டப முன்றிலில்—

மாலை 6 மணிமுதல் திரு.வி. சிவஞானசேகரம் இன்னிசைக் கச்சேரி. (அ-111)

### நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

## உண்மையான தெய்வம்

இராகம் : காப்பி தாளம் : ஆதி

உண்மையான தெய்வம் ஓங்கு நல்லைத் தெய்வம்
கண்ணுதலோன் தந்த கலியுகனாந் தெய்வம்

நித்த நித்தம் பூசை நியமந் தப்பாத் தெய்வம்
பத்தா கோடி கோடி பரவு மேலாந் தெய்வம்

யோகர் சித்தர் ஞானி உளாவிவந்து பாதம்
தோயத் தங்கு இருந்தே உயர வைத்த தெய்வம்

விண்ணும் மண்ணு வியக்க விழாக்கள் காணுந் தெய்வம்
பண்ணிற் பாக்கள் பாடிப் பரவிப் பணியும் தெய்வம்

அகதி என்றே அலறி அடியில் வீழ்வார்க்கெல்லாம்
தகுதி வாழ்வு தந்து தாங்கிக் காக்குந் தெய்வம்

—சேந்தன்

## குடாநாட்டில் தொடர்ந்து சர்வோதய நடவடிக்கைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 26

யாழ். மாவட்டத்தில் சர்வோதய இயக்கத்தின் செயற்பாடுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

கொழும்பு சென்றுள்ள— யாழ். அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப்பிரதிநிதிகளிடம்— சர்வோதயத் தலைவர் திரு. ஏ. ரி. ஆரியரத்ன இத்தகவலைத் தெரிவித்தார்

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவுடனான தகராறு காரணமாக சர்வோதய அமைப்பின் செயற்பாடுகளில் தேக்க நிலை ஏற்பட்டதாகவும்—

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சர்வோதய செயற்பாடுகளும் இதனால் பாதிக்கப்பட்டதாகவும்—

தற்சமயம் புதிய ஜனாதிபதியுடன் கொண்ட நட்புறவையடுத்து, சர்வோதய செயற்பாடுகளுக்கு மீண்டும் புத்துயிர் ஊட்டப்பட்டுள்ளதாகவும் இணையப் பிரதிநிதிகளிடம் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## அள்ளப்பட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

- 81 மி. மீ. ஷெல்கள் — 22
- 81 மி. மீ. ஷெல் வெளிச்சக்குண்டுகள் — 22
- 81 மி. மீ. இன்சென்றி — 2
- ஜே ஆர். ரக கைக்குண்டுகள் — 154
- எம். 75 ரக கைக்குண்டுகள் — 71
- எம். 73 ரக கைக்குண்டுகள் — 166
- 40 மி. மீ. ஷெல்கள் — 20
- பெரிய ஜே ஆர். கைக்குண்டு — 1
- ரி. என். ரி. ரக கைக்குண்டுகள் — 3
- ரி. வி. கிளைமோர்கள் (சிறியது) — 7
- வாகனக் கண்ணிகள் — 10
- கான் எக்ஸ்புளோடர்கள் — 10
- டப்பி மிதிவெடிகள் — 98
- டப்பி 22 ரக மிதிவெடிகள் — 85
- பச்சை நீளக் காற்சட்டைகள் — 59
- பச்சை மேல் சட்டைகள் — 133
- உருமறைப்பு நீளக் காற்சட்டைகள் — 188
- உருமறைப்பு மேல் சட்டைகள் — 172
- கைக்கடிகாரங்கள் — 4
- சுசுக்கி 125 AC ரக மோட்டார்சைக்கிள் — 1
- ஹொண்டா 175 ரக மோட்டார் சைக்கிள் — 1
- பணம் — 2 லட்சத்து 18 ஆயிரத்து 650 ரூபா
- பற்றரிப் பெட்டி — 1
- நடுத்தர ரவைகள் — 50.349
- ஜி. பி. என். சி ரவைகள் (லிங்குடன்) — 7,589
- 50 கலிபர் ரவைகள் — 657
- ஏ கே. எல். எம். ஜி. ரவைகள் — 2,394
- பி. கே. எல். எம். ஜி ரவைகள் — 2,102
- 303 ரக ரவைகள் — 1,517
- காட்ரிஜ் — 250
- நடுத்தர காஸ் ரவைகள் — 23
- 5. 56 ரக ரவைகள் — 12
- இரவு பார்வைக்காட்டி — 2
- ஆர். பி ஜி தொலைநோக்கி — 8
- 60 மி. மீ. தொலை நோக்கி — 4
- புரஜெக்டர்கள் — 4
- தொலைநோக்கிகள் — 4
- ஆர். பி. ஜி. றொட் — 8
- ஆர். பி. ஜி. பிறஸ் — 6
- 60 மி மீ மோட்டர் துப்புரவாக்கி — 4
- ஏ. கே. எல். எம். ஜி துப்புரவாக்கி — 12
- ஏ. கே. துப்புரவாக்கி — 35
- 60 மி. மீ. மேலதிக சைட்லைட் — 2
- டொங்கான் துப்புரவாக்கி — 2
- பி. கே. துப்புரவாக்கி — 1
- ஏ. கே. எல். எம். ஜி ரக ரம் ரவைக்கூடு — 51
- 303 ரக ரவைக் கூடுகள் — 22
- ஏ. கே. ரவைக் கூடுகள் — 455
- ரி 81 ரக ரவைக் கூடுகள் — 55
- ரி 81 ரக எல். எம் ஜி ரவைக்கூடு — 1
- ரி 81 ரக கத்தி — 2
- ஏ. கே- ரக கத்தி — 1
- சாதாரண கத்தி — 2
- கிளைமோர் வெடிக்க வைக்கும் கருவி — 1
- சைக்கிள் — 1
- சுமோக் கைக்குண்டு — 4
- கான்பரா லைட் — 2
- சிக்னல் பிளாஸ் — 89
- ஈ டி. பெரியது — 5
- கொம்பாஸ் — 3
- ஹெட்மெட் — 111
- ஸ்ரெச்சர் — 1
- பெரிய பற்றரி — 3
- சிறிய பற்றரி — 1
- ஏ கே. ஹோல்சர் — 105
- தண்ணீர் கான் ஹோல்சர் — 80
- ரேப் செட் — 3
- ஜெனரேற்றர்கள் — 2
- ரி. வி. — 2
- ரி. வி. டெக் — 1
- குண்டு துளைக்காத கவச அங்கி — 58
- ஓயில் கான் — 51
- ஏ. கே. எல். எம். ஜி. ஹோல்சர் — 69
- தொப்பி — 176
- சப்பாத்து — 257 சோடி
- கிட்பாக் — 57
- சிவில் பாக் — 75
- சிவில் சப்பாத்து — 165 சோடி
- தண்ணீர் கான் — 77
- சாப்பாட்டுப்பெட்டி — 168
- இராணுவப்பட்டி — 55
- கமரா — 4
- மழைக்கவசம் — 250
- சுவர் மணிக்கூடு — 1
- விநியோகப்பைகள் — 62
- மெப் கவர் — 3
- சிறிய கூடாரம் — 35

(ஒ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "குமண" பயணிகள் சேவை

பருத்தித்துறையில் தரித்துள்ள 'குமண' கப்பல் எதிர்வரும் 31ஆம் திகதி பயணிகள் சேவையில் ஈடுபடவிருக்கிறது.

பருத்தித்துறையிலிருந்து, அரச ஊழியர்களுடன் எதிர்வரும் 31 ஆம் திகதி திருகோணமலை நோக்கிச் செல்லும் 'குமண' கொழும்பில் சிகிச்சை பெற்றுத் திரும்புவோரை திருமலையில் வைத்து ஏற்றிக்கொண்டு மீண்டும் அடுத்த மாதம் 2 ஆம் திகதி பருத்தித்துறையை வந்தடையும்.

அன்று மாலை கொழும்பு செல்லும் நோயாளர்களை ஏற்றிக்கொண்டு 'குமண' மீண்டும் திருகோணமலைக்குப் புறப்படும். பின்னர் அது திருமலையிலிருந்து கொழும்புக்கு செல்லும். (உ-3)

# நிதி வர்த்தகத்தை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பத்து ஆண்டுகளாக எந்தவிதப் பிரச்சினையுமின்றி தனது வேலையை இயக்கி வரும் ஒரேயொரு நிதிநிறுவனம் என்பதாலும் —

இந்நிறுவனத்தை மத்திய வங்கி அதிகாரிகள் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதாகவும், இதனால் நிறுவனத்தின் உரிமத்தை (லைசென்ஸை) வருடம் தோறும் புதுப்பிப்பதை அவர்கள் இழுத்தடித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

1991, 1992 ஆம் ஆண்டுகளிலும் உரிமத்தைப் புதுப்பிப்பதை மத்திய வங்கியினர் சில மாதகாலம் இழுத்தடித்ததாகவும்-

இதேபோன்ற சூழ் நிலை இவ்வருடமும் தோன்றியிருப்பதை அடுத்து நிதி வர்த்தக நடவடிக்கைகளை முற்றாக நிறுத்தி, வேறு வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள நிறுவனத்தின் நிர்வாகம் முடிவு செய்திருப்பதாகவும் அறிய வந்தது

## உதவுவதற்கு முன்வராப் போக்கு

பொதுவாக நிதிநிறுவனங்களுக்கு திரவ நிதி நிலையில் நெருக்கடி வரும்போது கடன்களை வழங்கி உதவி வரும் மத்திய வங்கி, இந்த நிறுவனத்தைப் பொறுத்தவரை அத்தகைய போக்கைக் கடைப்பிடிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## கட்டாயக் கட்டுப்பாடுகள்

இது தொடர்பாக நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. எஸ். பாலசுப்பிரமணியம் பொது முகாமையாளர் திரு. ஜே. டி. நவரட்ணம் ஆகியோர் வைப்பாளர்களுக்கு தெரிவித்திருப்பதாவது:-

பொது மக்களின் முதலீடு தொடர்பாக எமது நிறுவனம் ஆழ்ந்த உணர்வுடன் கூடிய பொறுப்புடனும் கட்டுப்பாட்டுடனும் பல வருடங்களாகச் செயற்பட்டு வருகின்றது.

சட்ட நடவடிக்கைத் தாமதங்களினால் வரவேண்டிய நிலுவைகளை அறவிடுவதில் ஏற்படும் மந்தநிலை —

நாட்டின் தீர்வு காணப்படாத பிரச்சினைகள் காரணமாக முதலீடு செய்தவர்கள் எதிர்பாராத வகையில் நிதியை திரளாக மீளப் பெற்றமை —

பொதுமக்கள் முதலீடு செய்வதற்கு வேறு பாதுகாப்பான மார்க்கங்கள் ஏற்படுத்தப்பட்டமை —

ஆகியவற்றினால் எமது நிறுவனம் எதிர்நோக்கிய - தவிர்க்கமுடியாத பின்னடைவுகள் காரணமாக அது தனது நிதிக் கட்டமைப்பில் சில கட்டாய கட்டுப்பாடுகளுக்கு உள்ளாகவேண்டி வந்திருக்கிறது.

## கெடுபிடிகளால் நட்டம் காட்டும் நிலைமை

இத்தகைய நிலைமையுடன்- அறவிடப்படாத கடன்களுக்கான ஒதுக்கீடு தொடர்பாக மத்திய வங்கி விதித்திருக்கும் கெடுபிடியான கட்டுப்பாடுகளும் சேர்ந்து—நிறுவனத்தின் கணக்கில் நட்டத்தைக் காட்டும் நிலையை ஏற்படுத்தியிருக்கின்றன.

நிறுவனத்தின் வருவாய் நிலையை அதிகரிக்கவும், நிறுவனத்தின் நிதி உறுதிப் பாட்டைப் பேணவும் எமது முயற்சியாக உள்ளூர், வெளிநாட்டு முதலீடுகளை மேலதிகமாகப் பெறுவதற்கு நாம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வந்தோம்.

மேலதிக முதலீட்டைப் பெறவும், நிறுவனத்தின் நிதி உறுதிப்பாட்டையும் வருவாய் நிலையையும் அதிகரிக்கவும் நாம் எடுத்த நடவடிக்கைகள் பற்றி மத்திய வங்கி அதிகாரிகள் முற்றாக அறிந்திருந்தும்—

எமது நிறுவனம் நிதி வர்த்தகம் செய்வதற்கான — 1993 ஆம் ஆண்டிற்கான உரிமத்தை (லைசென்ஸ்) புதுப்பிக்காமல் அவர்கள் பின்னடித்து வந்துள்ளனர்.

நிதி [illegible] ப் பொதுவாகச் செய்யப் பட்டு வரும் தவறான பிரசாரத்தால் எமது முயற்சிகள் எதுவும் பயன்தரவில்லை.

இந்நிலையில் நிதி வர்த்தக நடவடிக்கையை நிறுத்திவிட எமது நிறுவனம் முடிவு செய்திருக்கிறது.

## வைப்பாளர் முதலீடுகள்

வைப்பாளர்களின் முதலீட்டை இயன்ற விரைவில் திருப்பிச் செலுத்துவதற்கான திட்டம் ஒன்று குறித்து நிறுவனத்தின் நிதி ஆலோசகர்களுடன் ஆராய்ந்து வருகிறோம். அந்தத்திட்டம் பற்றி குறுகியகாலத்தில் அறிவிப்போம்.

இத்தகைய நிலையில் வைப்பாளர்களின் ஒத்துழைப்பையும், புரிந்துணர்வையும் எதிர்பார்க்கிறோம். - என்று தெரிவித்தனர்.

வைப்பாளர்களின் முதலீட்டை திருப்பி வழங்குவதற்கான திட்டம் ஒன்றை நிறுவனம் மத்திய வங்கியின் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பித்திருப்பதாகவும் தெரிய வந்தது.

நிறுவனத்தின் இந்த அறிவிப்புக் குறித்து, கருத்து வெளியிட்ட ஷப்றாவின் யாழ். அலுவலக முகாமையாளர் திரு. என். ஜெயரஞ்சிதன், இது குறித்து வைப்பாளர்கள் கலவரமடையத் தேவையில்லை என்றார். வைப்பாளர்களுக்குச் செலுத்த வேண்டிய நிதிக்கு நிறுவனத்திடம் போதிய சொத்துக்கள் உள்ளன. அவற்றை பணமாக்குவதற்கு கால அவகாசம் தேவைப்படலாம். அக்கால அவகாசத்தை வைப்பாளர்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று அவர் கோரினார். (அ-உ)

# 10போராளிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ லெப்டினன்ட் துரைக்கண்ணன் அல்லது விக்ரம் (வைத்திலிங்கம் தயானந்தன் — வட்டக்கச்சி)

★ 2 ஆம் லெப்டினன்ட் சிவமணி யோகச்சந்திரன் ரவிசங்கர் — புதுக்குடியிருப்பு-இவரது சொந்த இடம் திருகோணமலை)

★ லெப்டினன்ட் விமலன் அல்லது வில்லவன் (கிருஷ்ண பிள்ளை புண்ணியமூர்த்தி — தோப்பூர், மூதூர்)

★ லெப்டினன்ட் குயிலன் (சிவப்பிரகாசம் சந்தகுமார் — மூளாய் தெற்கு)

★ லெப்டினன்ட் திருமலைநம்பி அல்லது பெர்னாண்டோ (வரப்பிரகாசம் யுக்தீபன் — கொழும்புத்துறை )

★ லெப்டினன்ட் அழகப்பன் அல்லது காந்தி (கபிரியல் பிள்ளை ஜோதிகாவலன் — ஏழாலை தெற்கு, ஏழாலை)

★ லெப்டினன்ட் நக்கீரன் அல்லது செந்தூரன் (சோமசுந்தரம் அரசரத்தினம் — பழுகாமம், மட்டக்களப்பு)

★ லெப்டினன்ட் தமிழ்வாணன் (செல்லையா வேதா — கோவில்போரதீவு, மட்டக்களப்பு)

★ 2 ஆம் லெப்டினன்ட் புகழரசன் (சின்னத்துரை கோணேஸ்வரன் — காரைநகர்)

# மரண அறிவித்தல்கள்

## டாக்டர் வெற்றிவேலு பத்மநாதன்

சுன்னாகத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும் ''சுகந்தீஸ'' வைத்தியசாலை உரிமையாளரும், ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரியுமான வெற்றிவேலு பத்மநாதன் (R. M. O) காலமானார்.

இவர் காலஞ்சென்ற வெற்றிவேலு - இராசம்மா ஆகியோரின் அன்பு மகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், சுகந்தி (கனடா), சூரியகுமார் (கனடா), பிரேம்குமார் (கனடா), ஜெயந்தி (கனடா), நிமலகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேந்திரன் (கனடா), ரவிச்சந்திரன் (கனடா) ஆகியோரின் மாமனாரும், சஜீவ், நிகேஷ், மயூரி, ஜனூஜ் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற திருமதி அன்னலட்சுமி சொக்கநாதன், சுந்தரமூர்த்தி (ஓய்வு பெற்ற ஆசிரியர்), டாக்டர் தம்பித்துரை [ஓய்வு பெற்ற கால்நடை வைத்தியர்], ஆகியோரின் சகோதரனும், தங்கராசா [சாந்தி கபே உரிமையாளர்], சுந்தசாமி [நடராஜா - ஓய்வு பெற்ற கணக்காளர்], இராசரத்தினம் (ஓய்வு பெற்ற ரயில்வே நிலைய அதிபர்), சுந்தரலிங்கம் (ஓய்வு பெற்ற தபால் திணைக்களப் பரிசோதகர்[, திருமதி சகுந்தலாதேவி குகராஜா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று 26 - 07 - 93 திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கொத்தியாலடி [சுன்னாகம்] மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
திருமதி கமலாதேவி பத்மநாதன்
(மனைவி)

சுகந்தி கட்டடம்,
பண்டிதர் மாணிக்கத்
தியாகராசா வீதி,
சுன்னாகம்.

[26678]

## திருமதி தங்கராசா தங்கரத்தினம்

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 81/6, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட, ''ராஜா கூல்பார்'' உரிமையாளர் சின்னத்தம்பி தங்கராசாவின் துணைவியான, தங்கரத்தினம் அவர்கள் 25 07-93 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பு — தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், ராஜேஸ்வரன் (லண்டன்), ஞானவாணி (ஆஸ்திரேலியா), ஞானமாலா (லண்டன்), ஞானலதா (அவுஸ்திரேலியா), ரெட்ணேஸ்வரன் (லண்டன்), ஞானநிதி (லண்டன்), ஞானமதி (லண்டன்), ஞானகீதா (கனடா), நித்திராஜா (லண்டன்), ஞானசெளரி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜயமாலா (லண்டன்), தனஞ்செயன் (ஆஸ்திரேலியா) ஞானலிங்கம் (லண்டன்), லோகநாதன் (ஆஸ்திரேலியா), மோகனா (லண்டன்), ஞானகுமார் (லண்டன்), நந்தகுமார் (லண்டன்), நித்தியானந்தன் (கனடா), உதயகுமார் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற இராஜசேகரம், இராசரத்தினம் (லண்டன்), சிவஞ்ஞானம்மா (லண்டன்), மகாலிங்கம், அன்னலட்சுமி, சிந்தாமணி (லண்டன்) ஆகியோரின் சகோதரியும், பரசக்தி (பிரான்ஸ்), தியாகராஜா (S T R), நித்தியலட்சுமி, தனபாலசிங்கம், பத்மநாதன் (லண்டன்), தர்மராஜா (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26-07-93) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
சி. தங்கராசா
(கணவர்)

81/6, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(26679)

## திருமதி கிறிஸ்ரீன் ஜெபமணி இராசநாயகம்

திருநெல்வேலி வடக்கு ஆடியபாதம் வீதியைச் சேர்ந்த திருமதி கிறிஸ்ரீன் ஜெபமணி - இராசநாயகம் காலமானார்.

இவர் காலஞ்சென்ற K.R இராசநாயகம் (Ret.Post Master) அவர்களின் மனைவியும், காலஞ்சென்ற திருமதி அன்றா, காலஞ்சென்ற திரு. ஜெபசிங்கம், திருமதி ஜெயசோதி, திரு. யேசுதாசன், ஆகியோரின் அன்புச் சகோதரியும், பேசி, ஜொனி, சிங்கிலி, ஜெமோ காலஞ் சென்றவர்களான விக்ரர், ஜோசப், ஜெபரட்ணசிங்கம் [ராசா] ஆகியோரின் சிறிய தாயாரும், ஜெயேந்திரன், ரவி, புவி, ராணி, சுலோ, குட்டி ஆகியோரின் மாமியும், றஞ்சன், சுஜிதா, சர்வானந்தா, கிறிஸ்ரி, றிச்சி, பௌலா, யோவா, பிறிந்தினி, பிறிசாத் ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (திங்கள்) மாலை 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று நல்லூர் பரி. யாக்கோபு ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்
திருமதி ம. ஜெபரட்ணசிங்கம்
(மருமகள்)

(26682)

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திரு: முத்துக்குமாரு ஸ்ரீகுமார்

(ராசாண்ணை)

அன்னையின் மடியில்: 29—07—1946

அநியாய அழிப்பில்: 27—07—1983

கண்ணீர்த் துளிகளை மலர்களாயெடுத்து,
காலமெலாம் நினைந்தே வணங்குவோம்.
பத்தாண்டு பறந்தும் பாசமோ விட்டிடோம்.
எந்நாளும் உம் நினைவில் நனைந்தே,
எண்ணச் சுடரை ஏற்றுவோம் ராசாவே!

உன் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
அம்மா, மாமி,
சகோதர, சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிகள்.

சேச் ஒழுங்கை,
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.

(26676)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 26-07-1993 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org